பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 19 சனிக்கிழமை 01.06.2024 கதிர் 206

## மோடியுடன் மோதக்கூடிய ஒரேயொருவர் ரணில்தான்

### இப்படிச் சொல்கிறார் ஐ.தே.க.. தவிசாளர்

இந்தியப் பிரதமர் மோடியுடன்மோதக்கூடிய ஒரே ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று ஐக்கியதேசியக்கட்சியின் தவிசாளர், நாடாளமன்ற உறுபபினர் வஜிர அபயவர்த்தரன தெரிவித்தார்.

கரந்தெனியவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்டோபர் மாதம் 17 அன்றுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமான ஒருவர் இலங்கையில் இருக்கின்றாரா என்று இங்குள்ள பொதுமக்கள் சிந்திக்கக்கூடும். சிலர் வெட்கமின்றி தேர்தலில் போட்டியிடவுள்ளனர். தம்மால் முடிந்தவற்றையேசெய்யவேண்டும். முடியாதவற்றுக்கு முயற்சிக்கக்கூடாது.

எமது அயல்நாடான இந்தியாவில் தற்போது தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்

☞ 8

## தவறுகள் தொடர்ந்தால் பெரமுன ஆளும் தரபிலிருந்து வெளியேறும்

தவறுகள் தொடர்ந்தால் அரசினை விட்டு வெளியேறுவோம் எங்களிடத்தில் வேட்பாளர் உள்ளார். தக்க தருணத்தில் நாம் களமிறக்குவோம் என்று பொதுஜனபெரமுன தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லவியில்உள்ள பொதுஜனபெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் இந்த அறிவிப்ப விடுக்கப்பட்டத.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டியாராச்சி இததொடர்பில் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தவொரு தலைவராலும் ரணில்

☞ 2

## தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை புலம்பெயர் தமிழர் கைவிடட்டும்

### அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்து

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதை தவிர்க்கவேண்டும் என்று அயலுறவுத்துறைஅமைச்சர் அலிசப்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொலைக்காட்சிநிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் தேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில்அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

காசா நெருக்கடி குறித்து மேற்குலக நாடுகள் அலட்சியமாக உள்ளன. சர்வதேச

☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை வழக்கு ஒரு வழியாக ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் நிலைதோன்றியிருக்கின்றது. வழக்கில் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்று வவுனியாவில் கடந்த மாதம் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த முடிவின்படிநீதிமன்றத்தில் நேற்று அனைத்து எதிராளிகள் சார்பிலும் ஒரு பொதுநிலைப்பாட்டை முன்வைப்பதற்குத் தாம் தயார் என்று எதிராளிகள் 7 பேர் சார்பிலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்த அவர்களின் எழுத்துமூல சமர்ப்பணத்திற்கு --ஜூன் 19 நாள் குறித்து வழக்குத் தவணையிடப்பட்டது. இருந்தாலும் கடைசி நேர 'ட்டுவிஸ்ட்'டாக கிளிநொச்சியிலிருந்து சண்முகராஜா ஜீவராஜா என்பவர் தன்னையும் இடையீட்டு மனுதாரராகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்திருக்கிறார். எதிராளிகள் சார்பில் அதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கபப்படவில்லை. வழக்கின் பிரதான வழக்காளியும் எதிராளிகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தாலும் இந்த இடையீட்டு மனுதாரர்களும் என்னென்ன செய்வார்களோ தெரியவில்லை.

நேற்றுக் காலை வழக்கு மீண்டும் திருகோணமலை

☞ 2

# இனப்படுகொலை குற்றச்சாட்டை கனடா மீண்டும் சுமத்தக்கூடாது

### அயலுறவுத்துறை அமைச்சு செயலர் கருத்து

இலங்கையில் இனப்படு கொலை இடம்பெற்றது என்ற ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை கனடா மீண்டும் சுமத்தக்கூடாது என்று இலங்கையின்வெளிவிவகார செயலாளர் அருணி விஜய வர்த்தன தெரிவித்தார்.

கனடாவின் சர்வதேச அபிவிருத்திக்கான பிரதி

☞ 2

## பொய் தகவல்கள்

அஸ்வெசும நலன்புரித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதுவரையில் வழங்கப்பட்டு வந்த முதியர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படுமென வெளியாகும் தகவல்கள்உண்மைக்குபுறம்பானவை என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

2024 மே மாதம் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான சுமார் 1518 மில்லியன் ரூபா நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப காரணங்களினால் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும், ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேசசெயலகங்களில் வழமையான முறையில் முதியவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் நலன்புரி நன்மைகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

☞ 8

## உயர் தரப் பெறுபேறு வெளியானது யாழ். இந்துவில் 50 பேருக்கு '3ஏ'

2023ஆம்ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகள் நேற்று வெளியாகின. அந்தப்பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரியில் 56 மாணவர்கள் '3 ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் 30 மாணவிகள் '3 ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 21 மாணவர்களும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவர்களும்பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் 9 மாணவிகளும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 9

☞ 2

## பல்கலை ஊழியர்களுடன் வரும் திங்களன்று பேச்சு

### உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுடன் எதிர்வரும்திங்கட்கிழமை பேச்சு நடத்தவுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்கலாநிதிசுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி

☞ 2

## அரச செலவுகளை ஈடுகட்டக்கூட இலங்கைக்கு வருமானமில்லை

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

அரச செலவினங்களை முகாமைத்தும் செய்வதற்குக்கூட அரச வருமானம் போதுமானதாக அமையவில்லை என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாதுக்க புகையிரத நிலையத்தின்அபிவிருத்தி பணிகளை நேற்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பன முரண்பாட்டுக்கு

☞ 2

## மைத்திரிக்கு எதிராக மற்றொரு வழக்கும்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மேலும் ஒரு மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தைஅவமதித்ததாக குற்றம் சுமத்தியே, இந்த மனு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்மொன்டேக் சரத்சந்திரவினால், இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னமற்றும்சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில், நேற்று மேற்படி மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள விடையங்களைஉறுதிப் படுத்துவதற்காக, பிரதிவாதியான

☞ 8

## ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு தெமட்டகொட புஸ்பராஜ் கைது

### இதுவரையில் 5 பேர் காவலில்

ஐ.எஸ் அமைப்பினருடன்தொடர்பில்இருந்தார்எனசந்தேகிக்கப்படும் தெமடகொட ஒஸ்மன் புஷ்பராஜ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப் பட்டார்.

இந்தியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட 4 இலங்கையர்களுடன் நெருங்கியதொடர்புகளைஇவர் பேணினார் எனவும் அவர்களுக்கு உதவி, ஒத்தாசை வழங்கினார் எனவும்இவர்மீதுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒஸ்மன் புஷ்பராஜ் குற்றப்புலனாய்வுப்பிரிவு மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கூட்டு நடவடிக்கையின்போதே கொழும்பில் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக, பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய குற்றச் சாட்டின் கீழ், இந்தியாவில் கைதான 04 இலங்கையருடனும் தொடர்புகளை வைத்திருந்த குற்றச்சாட்டில், மாவனல்லை

☞ 2

## உயர் நீதிமன்ற சீரமைப்புக்காக சீனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் உயர் நீதிமன்ற கட்டடத்தொகுதி புனரமைக்கப்பட உள்ளது. இதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பான முழுமையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இதற்கான நிதி ஒப்பந்தமே கைச்சாத்தாகியது.

நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி ஒப்பந்தத்தில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் சீன அரசாங்கத்தின் சார்பில் சீன தூதுவர் கீ ஷென் ஹோன்ங் கும் கைச்சாத் திட்டுள்ளனர். இவர்களுடன்

☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதுவரை எதிராளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தமதுதரப்பு அவதானங்களை வழக்காளியின் சட்டத்தரணி எடுத்துரைத்தார்.

எதிராளிகள் சார்பில் மூன்று வெவ்வேறுவிதமானநிலைப்பாடுகள் மன்றில் முன்வைக்கப்பட்டுள்ளன, அவற்றுக்குஇடையேஇணக்கமான ஒரு நிலைப்பாட்டைக் கண்டு, சுமுகமாக விடயத்தைத் தீர்ப்பது சாத்தியமற்றது என்றார் வழக்காளி தரப்புச் சட்டத்தரணி.

எதிராளிகள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இந்த வழக்குத் தொடர்பில் கட்சி ரீதியாக எதிராளிகள் அனைவரும் ஒரே தீர்மானத்தை எடுப்பது என்ற முடிவை அறிவித்திருக்கின்றது. அதன் அடிப்படையில் ஒரே நிலைப்பாட்டை பதில் மனுக்களாக எதிராளிகள் சமர்ப்பிப்பார்கள் என்றார். அந்தச் சமர்ப்பணத்தின் அடிப்படையில் இணக்கமான முடிவு ஒன்றுக்கு வழக்காளியும் எதிராளிகளும் வரமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுஅந்தப்பதில்மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு வசதியாக ஜூலை 19 அன்றைய தினத்திற்கு வழக்கை தவணையிட்டார் இதற்கிடையில், வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது கிளிநொச்சியைச் சேர்ந்த கட்சி உறுப்பினரான சண்முகராஜா ஜீவராஜா என்பவர் தம்மையும் இடையீட்டு எதிராளியாச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தார். கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர்சிறீதரனின்சட்டத்தரணி வி.புவிதரனே அவருக்காகவும் முன்னிலையானார்.

எதிராளிகள் தரப்பில் அவரை ஓர் எதிராளியாகச் சேர்த்துக் கொள்வதற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் குழப்பங்கள், புதிய திருப்பங்கள் இல்லை என்றால், வழக்கு விரைவிலேயே ஒ--ரு முடிவக்கு வரும். அதன் பின்னர் யாப்பின்படி மீண்டும் தொகுதிக் கிளைகள் புனரமைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். அதுவரையில அனைவரும் காத்திருக்க வேண்டும்.

இந்தவழக்கையொட்டியதாகவே தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கான நீதிமன்ற அவமதிப்பு வழங்கும் நேற்று அழைக்கப் பட்டிருந்தது. முதல் தடவையாக நீதிமன்றத்தில் தோன்றியிருந்தார் புதிய சுதந்திரன் என்கிற பத்திரகையின் ஆசிரியர் அகிலன் முத்துக்குமாரசாமி.

அவதூறு விவகாரம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சம்பந்தப்பட்ட இலத்திரனியல் பத்திரிகையில் வெளியான செய்தி தம்முடையதே என்று உறுதிப்படுத்தினார் அகிலன். எனினும், அதில் அவர் நீதிமன்ற அவமதிப்பு எதனையும் செய்யவில்லைள என்றும், அதனால் குற்றம் எதுவும் இழைக்கப்படவில்லை என்றும் அவரது சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

செய்தி முழுமையாக தம்முடையதுதான் என்று அகிலன் முத்துக்குமாரசாமி ஏற்றுக்கொள்கின்றமையால்குறுக்குவிசாரணை அவசியமற்றது என்று மேற்படி நீதிமன்றஅவமதிப்புக்குற்றச்சாட்டை சுமத்திய எதிராளியான ஜனாதிபதி சட்டத்தரணிசுமந்திரன்தெரிவித்தார். எனினும், அவர் இழைத்த நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் தொடர்பில் தமது வாதத்தையும் சமர்ப்பணங்களையும்எழுத்தில்தாம் சமர்ப்பிப்பார் என்றும் சுமந்திரன் சொன்னார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இனப்படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கிறிஸ்டபர்மக்லெனனை சந்தித்தவேளை மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

இலங்கை வருவாய் ஈட்டல் வளர்ச்சியை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இலங்கை பொருளதார இராஜதந்திரத்திற்கு கொடுத்துள்ள முன்னேற்றம் சீராக காணப்படுகின்றது.அச்செயற்பாடுகள் நல்லிணக்கத்தை, அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளிற்கு சமாந்திரமாக இடம்பெறுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் இனப்படுகொலை தொடர்பான தவறான கதைகளை வெளியிடும் விதத்தில் கனடாவில் அண்மைய ஆண்டுகளில் உயர்மட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் தொடர்பில் இலங்கை ஆழ்ந்த கவலையைக் கொண்டுள்ளது.

கனடா இலங்கையுடன் ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபாட்டை வெளிப்படுத்தவேண்டும். பேச்சுமற்றும்நல்லிணக்கத்திற்கான முயற்சிகளிற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுகின்றேன் என்றார்.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

தற்போது பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது ஒருதுரதிஷ்டவசமானவிடயமாகும். ஏனென்றால்இதன்ஊடாகஎதிர்கால சந்த்தியினரான மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் நாளாந்தம் சுமார் 150 மில்லியன் ரூபா நேரடியான நட்டம் ஏற்படுகின்றது.

இது நிதி ரீதியிலான நட்டம் மாத்திரமே. மனித நேரமும் இதன்மூலம் வீணடிக்கப்படுகிறது. எனவே இன்னும் ஒரு மணித்தியாலத்தையேனும் வீணடிக்க ஆளும் தரப்புக்கத் தேவையில்லை. பெற்றோர் என்ற வகையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதன் பாதிப்புத் தெரியும் என்று நினைக்கிறேன்.எனவேஅவர்களும் இதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதற்கு சரியானதீர்வைஎவ்வாறுதேட்டுவது என்பதையேநாம்இப்போதுபார்க்க வேண்டும்.

வேலைநிறுத்தத்தில்ஈடுபட்டுள்ளவர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு நிறைவேற்றசுமார்1.1பில்லியன்ரூபா தேவைப்படுகின்றது. நான்இதுபற்றி விரிவான அறிக்கையொன்றைத் தருமாறு கேட்டிருக்கின்றேன்.

நாம் எவ்வாறு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பது குறித்து நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். நான் எதிர்வரும் திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். ஒரு மத்திய நிலையில் இருந்து இதற்கு தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

உயர் கல்வி தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றவர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட எமது அரசாங்கம் இவ்விடயத்தில் சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்த்துள்ளோம். தற்போதுள்ள பொருளாதார நிலையில் எதனை வழங்கமுடியும்என்றுஅனைவரும் சிந்திக்க வேண்டும்.

இந்நாட்டு உயர்கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும். நான் அண்மையில் உலகலாவியஉயர்கல்விமாநாட்டில் கலந்துகொண்டேன். இதன்போது, நவீன உலக மாற்றத்திற்கேற்ப உயர்கல்வி முறைமையில் மாற்றம் இடம்பெற வேண்டும் என்றகருத்திலேயேபெரும்பாலான நாடுகள் இருக்கின்றன.

அதேபோன்று, தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக் குழு ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் தற்போது தயார்செய்யப்பட்டு வருகின்றது. எமது நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர வெளிநாடுகளுக்குச் செல்வதற்குப் பதிலாக நம் நாட்டு உயர்கல்வியை மேற்கொள்ளக் கூடிய வகையில் மேம்படுத்த வேண்டும் என்றார்.

## ஐ.எஸ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் கைத செய்யப்பட்டனர்.

இந்தியாவிலிருந்துஅடையாளம் தெரியாத நபர் ஒருவர், இவர்களது வங்கி கணக்குகளுக்கு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணத்தை, இவ்விரண்டு சந்தேகநபர்களும், தற்போது கைது செய்யப்பட்டள்ள தெமட்டகொட ஜெராட் புஸ்பராஜா ஒஸ்மன் ஜெராட் என்ற நபரிடம் வழங்கியுள்ளனர்.

இந்த பணத்தை தெமட்டகொட ஜெராட் புஸ்பராஜா ஒஸ்மன் ஜெராட் என்ற நபர், இந்தியாவில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளநால்வரிடமும் வழங்கியிருக்கலாமெனபொலிஸார் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

மாவனெல்லை பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் சேர்த்து, இந்த சம்பவம் தொடர்பில் ஐவர் கைது இதுவரை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கைது செய்யப் பட்டுள்ள ஐந்து சந்தேகநபர்களும், அஹமதாபாத்தில் கைது செய்யப் பட்ட நால்வருக்கும் இந்தியா செல்ல வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளவர்களாவார்.

அஹமதாபாத்தில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும், இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதலைநடத்ததிட்டமிட்டிருந்தனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையரும், இந்தியாவுக்கு செல்வற்கு முன்னர் கொழும்பு - மாளிகாவத்தை பகுதியிலுள்ள ஓர் இடத்தில் ஒன்று கூடி கலந்துரையாடல்களைநடத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இவர்கள் சந்திப்பு நடத்தியபோது, எடுக்கப்பட்ட புகைப் படங்களை, அவர்களது கையடக்கத் தொலைபேசியிலிருந்து இந்திய பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிகளும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 6 மாணவர்களும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் 5 மாணவிகளும் '3 ஏ' திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் மதியழகன் டினோஜன் பௌதீக விஞ்ஞானப் பாடத்தில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகியுள்ளார். இவர் அகில இலங்கை மட்டத்தில் 47ஆவது நிலையைப் பெற்றள்ளார்.

இதேவேளை, அகில இலங்கை ரீதியில் பௌதீக விஞ்ஞானம் (கணிதம்) பிரிவில் சிறந்து விளங்கிய கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த சிரத் நிரோதா முதல் இடத்தைப் பிடித்தார்.

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் முதலிடம் பெற்றவர் கினிகத்தேன மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஷெஹானி நவோத்-.விஞ்ஞான பாடத்தில் காலி சங்கமித்த பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த உபனி லெனோரா முதல் நிலை பெற்றார். கலைப் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்ததசுன்ரித்மிகா. பாணந்துறை பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஷெஹாரா சிதுமினி, வர்த்தகப் பிரிவிலும் இலங்கையில் முதல் இடம் பெற்றனர்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு கோரி ஆசிரியர் -அதிபர் சங்கத்தினர்வியாழக்கிழமைமுதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு இன்னும் வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை என்பதை இவர்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு பேச்சு நடந்துவரும் நிலையில் சகல அபிவிருத்தி பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு வெற்றிப் பெற்றால் மாத்திரமே அபிவிருத்தி பணிகளை தொடர முடியும். அரச செலவினங்களை முகாமைத்தும் செய்வதற்குக்கூட அரச வருமானம் போதுமானதாக அமையவில்லை.

சம்பள அதிகரிப்பு கோரி எவர் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இந்த ஆண்டு எவருக்கும் சம்பளத்தை அதிகரிக்க முடியாது. 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பிறிதொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு என்றே குறிப்பிட வேண்டும்.

ஏனெனில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதைய மறுசீரமைப்புக்களை தொடர வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போதையமறுசீரமைப்புக்களை மாற்றியமைத்தால் ஒருவாரம் கூட நாட்டை நிர்வகிக்க முடியாது என்றார்.

## தவறுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை வாக்களித்து ஜனாதிபதியாக முடியவில்லை. ஆனால் பொத ஜன பெரமுன 134 பிரதிநிதிகளைப் பயன்படுத்தி அவரை ஜனாதிபதிக் கதிரையில் அமரவைத்துள்ளது.

அந்த நேரத்தில் இலங்கையில் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் காரணமாக போராட்டம் நடத்தப் பட்டது. ஜனாதிபதியாக அரசியாசனத்தில் அமர்த்தப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அந்தப் பிரச்சினைகளை சரியாக எதிர்கொண்டார் என்றே நாம் நம்புகின்றோம்.

அப்பிரச்சினைகள் இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நாட்டின் ஜனநாயகத்தினை உறுதிப்படுத்துவது அவிசயமாகும். நாட்டின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் காரணமாக ஜனாதிபதி ஆசனத்தில் உங்களை அமர்த்தினோம்என்பதைநாம்மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றோம்.

பொதுத் தேர்தலையோ அல்லது ஜனாதிபதி தேர்தலையோ ஒத்திவைப்பதற்கானஅதிகாரத்தினை நாம் உங்களுக்கு (ஜனாதிபதிக்கு) வழங்கவில்லை.

நாங்கள் ஆசனத்தில் அமர்த்திய ஜனாதிபதி என்ற வகையில் உரிமையுடன் உங்களித்தில் கோருகின்றோம். எமது உரிமையையும் பெற்றுத் தாருங்கள் தேர்தலுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். தேர்தலுக்காக நாம் அச்சமடையவில்லை என்றார்.

பொதுஜனபெரமுனவின்பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகரகாரியவசம் தனதுரையில், ஜனாதிபதி என்ற வகையில் மட்டும் அல்ல நாட்டுக்குப் பாதகமான கேடுகளை விளைவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால்நாம்அதனை முழுமையாகஎதிர்ப்போம். தவறுகள் தொடர்ந்தால் அரசினை விட்டு வெளியேறுவோம் எங்களிடத்தில் வேட்பாளர் உள்ளார். தக்க தருணத்தில்நாம்களமிறக்குவோம் என்றார்.



# ஊடகவியலாளர் ஐ. நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல்

## சர்வதேச விசாரணை கோரி ஆர்ப்பாட்டமும் நடந்தது



படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடேசனின் திருவுருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச விசாரணை கோரி ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டு ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இந்த நினைவேந்தலுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கருணாகரன், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்களானபா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இ.பிரசன்னா, இரா.துரைரெட்னம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் உட்பட அரசியல்வாதிகள்மற்றும்சமூகசெயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு அன்னாரின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, அங்கு படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பான சர்வதேச விசாரணை வேண்டும் எனும் தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு ஊடக அமையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு -

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டுநினைவுதினம் அனுஸ்டிக்கப்படும் நிலையில் கடந்த இருபது வருடங்களாக அவரின் படுகொலைக்கு காரணமான குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இன்று வரை 43 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 35 தமிழ் ஊடகவியலாளர்கள், 05 சிங்கள ஊடகவியலாளர்கள், 03 முஸ்லிம் ஊடகவியலாளர்கள் அடங்குகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் ஓர் ஊடகவியலாளரும், ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் 02 ஊடகவியலாளர்களும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் 13 ஊடகவியலாளர்களும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர் படுகொலைகள் 2010 ஆம் ஆண்டுவரை தொடர்ந்துகொண்டே இருந்தது.

இந்நிலையில் இலங்கையில் நடைபெற்றுவந்த படுகொலை ஆட்சியை ஊடகத்துறையின் பெரும்பங்குடன் முடிவுக்கு கொண்டுவந்த இலங்கை அரசாங்கம் இரண்டு



சிங்கள ஊடகவியலாளர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தபோதும் குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

அத்தோடு, நாட்டில் பெருந்தொகையாக படுகொலை கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இன்று வரை விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை.

இலங்கையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள்உள்ளிட்டஅனைத்துஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட்ட வேண்டும்.

இலங்கையில் இன்று வரை சுட்டுக்கொல்லப்பட்ட, காணாமல்போன ஊடகவியலாளர்களின் பெயர், விவரங்களை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிடவேண்டும்.

இலங்கையில் தொடரும் மறைமுகமான ஊடக அடக்குமுறையை தடுத்து நிறுத்தி ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை விசாரணையை மீள ஆரம்பிக்கவேண்டும். - என்றுள்ளது. (05)

# புகைத்தல், மது பாவனைக்கு எதிராக நெடுந்தீவில் விழிப்புணர்வு நிகழ்வு



'நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் மே 31 ஆம் திகதி முதல் ஜூன் 14 ஆம் திகதி வரையில் புகைத்தல் மற்றும் மது எதிர்ப்புதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அதன் ஓர் அம்சமாக, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்தி கிளையின் ஏற்பாட்டில் புகைத்தல் மற்றும் மது பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வொன்று பிரதேச செயலக முன்றலில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் நிவேதிகா கேதீசன், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (05)






# மறைந்த பிரான்ஸ் தூதுவருக்கு கொழும்பில் அஞ்சலி நிகழ்வு

இலங்கைக்கான மறைந்த பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிராங்கோயிஸ் பேக்டெட்டின் அஞ்சலி நிகழ்வு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சென். மேரிஸ் தேவாலயத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றது.

இலங்கையின் அப்போஸ்தலிக்க தூதுவர் வணக்கத்திற்குரிய பிரையன் உதய்க்வே அஞ்சலி நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)



# தேர்தல் ஆணைக்குழுவிற்கு அமெரிக்க தூதுவர் வருகை

## கரிசனைக்குரிய விடயமல்லவாம் என்கிறார் தேர்தல் ஆணையாளர்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமைஅலுவலகத்திற்குவிஜயம் மேற்கொண்டுஆணையாளர்களை சந்தித்துள்ளமைகுறித்துபொதுமக்கள் கவலையடைய தேவையில்லை என தேர்தல் ஆணையகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுயாதீன ஆணைக்குழுவின் உயர்அதிகாரியைஅமெரிக்கதூதுவர் சந்திப்பது குறித்து பொதுமக்கள் கவலையடையதேவையில்லை எனதேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அது இரகசிய விஜயமாகயிருந்தால் அமெரிக்க தூதுவர் தான் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுடன் எடுத்துக்கொண்ட படங்களை பகிர்ந்துகொண்டிருக்கமாட்டார் என சமன்ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் செப்ரெம்பர் ஒக்ரோபர்மாதத்தில்இடம்பெறவுள்ள ஜனாதிபதிதேர்தலிற்கானஏற்பாடுகள் குறித்து அமெரிக்க தூதுவர் கேட்டறிந்தார் எனத் தெரிவித்துள்ள சமன்ஸ்ரீரத்நாயக்க தேர்தல்கள் ஆணையகத்திற்கு மேலும் பல வெளிநாட்டு பிரதிநிதிகள் விஜயம் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிநாடாளுமன்றத்தைக் கலைத்தால்ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான எங்களின் ஏற்பாடுகள் குறித்தும் வெளிநாட்டுபிரதிநிதிகள்கேட்டறிந்துள்ளனர் எனவும் சமன்ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவரின் விஜயத்தின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் எங்களை சந்திக்க வந்தனர் என குறிப்பிட்டுள்ள அவர் உள்நோக்கம் கொண்டபலதரப்பினர்வெளியிடும் பொய்களிற்கு பொதுமக்கள் பலியாகக்கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ளார்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏற்க முடியாத கோரிக்கை

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதை தவிர்க்கவேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காசாநெருக்கடி குறித்து மேற்குலகநாடுகள் அலட்சியமாக உள்ளன. சர்வதேச ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச சட்டங்களில் தீவிர மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

பலஸ்தீன விவகாரத்தில் சர்வதேசம் இரட்டை நிலைப்பாடு மற்றும் பாசாங்குதனத்துடன் தொடரமுடியாது.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகள் நல்லிணக்க முயற்சிகள் சம்பந்தமாக மீளாய்வு அவசியமாகின்றது. பிரஜைகளின் மனித உரிமையை மேம்படுத்துவதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை வெளிச் சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல்போயுள்ளதாக தெரிவித்துள்ள 6700 பேரின் வேதனையை ஏற்றுக்கொள்கின்றேன். அவற்றுக்காக இலங்கையில் நல்லிணக்கத்திற்கு ஏற்ற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டிய அவசியமாகும்.

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்;ச்சி நிரலை தவிர்க்கவேண்டும் அதனால் வீணான குழப்பங்களே ஏற்படுகின்றன. நாட்டின் வட,கிழக்கிற்கான அதிகாரப்பகிர்வு மற்றும்அபிவிருத்தியின்அவசியம்;மிகவும்அவசியமானதாகும் என்று அலி சப்ரி தெரிவித்திருக்கிறார்.

இலங்கையைப் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கும் செயல்முறைகளையும் இலங்கை அரசுடன் சேர்ந்து ஆட்சியாளர்களும் இனப்படுகொலையாளிகள் என்று உலகத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான முயற்சிகளையுமே புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரல் என்று அயலுறவுத்துறை அமைச்சர் கருதுகின்றார் என்று எடுத்துக்கொள்ளலாம்.

அவற்றைப் புலம்பெயர் தமிழர்கள் கைவிடவது என்பது அவர்களின் கைகளில் இல்லை. இலங்கையின் ஆட்சியாளர்களது கைகளிலேயே இருக்கின்றது. போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஓர் தீர்வைத் முன்வைக்காத இலங்கை ஆளும் தரப்பில் இருந்துகொண்டு புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கைவிடம்படி கோரும் எந்த உரிமையும் அயலுறவுத்துறை அமைச்சரக்குக் கிடையாது.

உள்நாட்டு நீதிக்கும், பொறுப்பக்கூறலுக்கும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தில் ஒரு துரும்பைக்கூட நகர்த்தாத ஆளும் தரப்புப் பக்கம் இருந்தபடி, இவை எல்லாவற்றையும் செய்வதாக பன்னாட்டுச் சமூகத்தின் முன்பாக ஒப்புக்கொண்டு வாக்குறுதியளித்துவிட்ட பின்னர் அதிலிருந்துவழுவியஆளும்தரப்புப்பக்கம்இருந்துகொண்டு அதுவும் இலங்கையில் ஒடுக்கப்படும் மக்கள் இனங்களில் ஒன்றான முஸ்லிமாக இருந்துகொண்டு புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் குறித்து பேசும் அருகதையும் அவருக்குக் கிடையாது.

காஸாவிடயத்தில்மேற்குலகுஇரட்டைவேடம்போடுகின்றது என்று குற்றஞ்சாட்டகின்றார். அது உண்மைதான். மறக்க முடியாது. ஆனால்அதைச்சொல்லும்தகுதியோஉரிமையோ அயலுறவுத்துறை அமைச்சருக்கும் அவர் சார்ந்திருக்கும் ஆளும் தரப்பின் அரசுத் தலைவருக்கும்கூடக் கிடையாது. ஏனெனில்அதே இரட்டைவேடத்தை தமிழர்கள் விடயத்திலும் காஸா முஸ்லிம்கள் விடயத்திலும் காட்டபவர்கள்தான் இவர்கள் இருவரும்.

எனவே புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலைக் கைவிடக் கோரும் உரிமையோ நிலமையோ இலங்கையில் எவருக்கும் கிடையாது. குறிப்பாக அயலுறவுத்துறை அமைச்சருக்கு அதற்கான எந்தத் தகுதியும் கிடையாது. அவரது கோரிக்கையின்படி தமது அரசியல் நிகழ்ச்சி நிரலைப் புலம்பெயர் தமிழர்கள் கைவிடக்கூடாது; கைவிடவும்மாட்டார்கள்.

# அணையாதிருக்கும் எரிந்த தீ



யாழ்ப்பாணத்தின்பழமையானநிறுவனங்களில் ஒன்றும்உலகளவில்பேசப்பட்டதும்யாழ்ப்பாணத்து நூலகமாகும்.

## வரலாறு

இந்த நூலகம் ஆரம்பத்தில் தனி நபர் ஒருவரால் துவங்கப்பட்டது. கனகசபைமுதலித்தம்பிசெல்லப்பா (1896 - 1958) என்னும் ஆர்வலரால்தான் முதன்முதலில் இந்த நூலகம் சிறிய அளவில் அவரது வீட்டில் துவங்கப்பட்டது. நவம்பர் 11, 1933 அன்று இவர் தனது வீட்டு அறை ஒன்றில் சில நூல்களுடன் இந்த நூல் நிலையத்தைத் தொடக்கி நடத்தி வந்தார். செல்லப்பா அவர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் எழுதுநராகப் பணியாற்றியவர்.

பின்னர் இதனைப் பலருக்கும் பயன்படுத்தும் நோக்கில் விரிவுபடுத்தச் செல்லப்பாவும் வேறு சில பிரமுகர்களும் விரும்பினர். 1934ஆம் ஆண்டு ஐசாக் தம்பையா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றகூட்டம்பொதுநூலகத்தின்தோற்றத்திற்கு அடிகோலியது. செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 184 ரூபாய்தான் பொது நூலகத்தின் மூலதனமாக அமைந்தது. அக்காலத்தில் அது பெரிய தொகைதான். அதன்படி யாழ்ப்பாணத்து நகரின் மத்தியிலிருந்த மருத்துவமனை வீதியில் வாடகை அறை ஒன்றிற்கு நூலகத்தை மாற்றினார்கள். அப்போது 844 நூல்களுடனும் 36 பருவ வெளியீடுகளுடனும் நூலகம் 1934ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1936க்குப்பின்னர்நூலகம்யாழ். நகரசபையிடம் கையளிக்கப்பட்டது. அதன் பிறகு யாழ்ப்பாணத்துக் கோட்டையின் அருகே புதிதாகக் கட்டப்பட்ட நகர மண்டபத்துக்கு அருகிலுள்ள இடத்திற்கு நூலகம் மாற்றப்பட்டது.

அப்போது யாழ்ப்பாண நகரம், மாநகரசபை அந்தஸ்துக்கு தரமுயர்த்தப்பட்டு புதிய சபை பதவியேற்ற பின் இந்த நூலகத்துக்கான புதிய கட்டடம் கட்டும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென பல்வேறு வழிகளில் நிதி திரட்ட முயற்சி எடுக்கப்பட்டு வெற்றி பெற்றது.

நூலகத்துக்கான அடிப்படைகளைத் தீர்மானித்து வழிநடத்தும் நோக்கில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பல கல்வியாளர்களையும், பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று 1953ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்குழு இதற்கென இந்திய நிபுணர்களின் உதவிகளையும் பெற்றுக் கொண்டது.

தமிழ்நாட்டின் கட்டடக் கலைஞர் நரசிம்மனிடம் நூலகத்திற்கான புதிய கட்டடத்தின் வடிவமைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. அவர் திராவிடக் கட்டிடக்கலைப் பாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டடமொன்றை வடிவமைத்தார்.

1959ஆம் ஆண்டில் கட்டட வேலைகள் முற்றாக முடிந்தன. அதற்கு முன்னரே யாழ்ப்பாண மேயராக இருந்த ஆல்பிரட் துரையப்பா நூலகத்தின் திறப்பு விழவை நடத்தினார். 11.10.1959 அன்று நூலகம் அதி விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது. அப்போது நூலகர் உட்பட 33 பேர் கடமையாற்றி வந்தார்கள்.

## 1981 யாழ்ப்பாணத்து நூலகம் எரிப்பு

1981 இல் யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு என்பது இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு முக்கிய நிகழ்வாகும். 1981 ஆம் ஆண்டு ஜூன் ஒன்றாம் தேதி சிங்கள வன்முறைக் குழு ஒன்றால் இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. ஆளும் தரப்பு அதற்கு ஆதரவும் அனுசரணையும் வழங்கியது.

இந்த வன்முறை 1981 மே 31 இரவு அன்று ஆரம்பமானது. அப்போதுயாழ்ப்பாணநகரில்உள்ள முக்கிய சந்தை, வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆகியவை முற்றாக எரிக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பு என்பது 20ஆம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படுகிறது. அப்போது நூலகத்தில் 97,000 நூல்கள் இருந்தன. அதில் பல அரிய நூல்களும் அடக்கம். மேலும் தென் கிழக்காசியாவிலேயே உள்ள பெரிய நூலகங்களில் யாழ்ப்பாணத்து நூலகமும்ஒன்றாகும். நூற்றாண்டுகள்பழமையான ஓலைச்சுவடிகள், 1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் போன்றவை நூலகத்திலிருந்தன.

இந்த நூலக எரிப்ப கும்பலில் இலங்கையின்



அமைச்சர் காமினி திசாநாயக்கா, சிறில் மத்தியூ உட்பட பல்வேறு சிங்கள அரசியல் தலைவர்கள் அடங்கியிருந்தனர். நூலகம் எரிக்கப்பட்டது ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் அழியாக் காயத்தை ஏற்படுத்தியது. மேலும்தமிழ்த்தேசியப்போக்கிற்கும் உரத்தை ஊட்டியது.

## அரசு விசாரணை

யாழ். நூலகம் எரிக்கப் பட்ட போது ஐக்கிய தேசியக்கட்சிஅரசாங்கம்ஆட்சிசெய்துவந்தது. 1981 மே, ஜூன்கலவரங்களுக்குகாரணமானவர்களைக் கண்டறிவதற்கானவிசாரணையைநடத்தவில்லை. இதை அமெரிக்காவைச் சேர்ந்தவரும், பன்னாட்டு மன்னிப்பு அவையின் 1981 இலங்கைக்கான உண்மை அறியும் ஆணைக்குழுவின் தலைவருமான ஓர்வில் எச். ஷெல் அப்போது பதிவு செய்திருக்கிறார். இக்குற்றங்களுக்காக எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை.


## மீள் கட்டுமானம்

நூலகம் எரிக்கப்பட்டு ஓராண்டிற்குப் பின்னர் 1982இல் யாழ் நூலக வாரம் ஒன்றை யாழ்ப்பாண சமூகம் முன்னெடுத்தது. இதன் மூலம் பொது மக்களிடம் இருந்து ஏராளமான நூல்கள் சேகரிக்கப்பட்டன. கட்டடத்தைப் புனரமைக்கும் வேலைகளும் ஆரம்பமாயின. அதேவேலையில் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான 1983 ஜூலை வன்முறைகள் தென்னிலங்கையில் ஆரம்பித்தது. இந்நிலையில் 1984இல் நூலகக் கட்டடம் புனரமைக்கப்பட்டது. ஆனாலும் ஈழப்போர் தொடர்ந்து நடந்ததினாலும், கட்டிடம் எறிகணைகள் மற்றும் துப்பாக்கிச் சூடுகளால் சேதமடைய ஆரம்பித்தது. இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் கோட்டையில் நிலை கொண்டிருந்தனர். இதனால்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அணையாதிருக்கும் எரிந்த தீ

4ம் பக்க தொடர்ச்சி...........




நூலகம் நிரந்தரமாக மூடப்பட்டது.

1998ஆம் ஆண்டில் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவின் அரசு நூலகத்தை மீளக் கட்டியெழுப்ப முடிவெடுத்தது. வெளிநாட்டு அரசு உதவி கோரப்பட்டது. இதற்கென 1 மில்லியன் டாலர் செலவழிக்கப்பட்டு 25,000 நூல்கள் வரை சேகரிக்கப்பட்டன. இறுதியாக 2004ஆம் ஆண்டில் நூலகம் பொது மக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

## யாழ்ப்பாண நூலகம்

யாழ் நூலக வரலாறு, மற்றும் அதன் எரிப்பு குறித்த சாம்பலில் இருந்து மீண்டெழுநத யாழ். பொது நூலகம் (The Jaffna Public Library rises from its ashes)




என்ற பெயரில் ஓர் ஆவண நூலைக் கட்டடக்கலை நிபுணர் வி. எஸ். துரைராஜா எழுதி வெளியிட்டுள்ளார். எரியும் நினைவுகள் என்ற பெயரில் ஓர் ஆவணப் படத்தை ஊடகவியலாளர் சி. சோமிதரன் இயக்கி வெளியிட்டுள்ளார்.

தற்போது யாழ்ப்பாணத்து நூலகம் கிரமமாக இயங்கி வந்தாலும் 1981 ஆம் ஆண்டில் அந்நூலகம் எரிக்கப்பட்டது, இலங்கை தமிழ் மக்களுக்கு ஆறாத ஒரு வடுவாக இன்றும் இருக்கிறது.

# இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு 36,000 கருவிழிப்படலங்கள் வழங்கல்

இலங்கைபாகிஸ்தானுக்கு 36,000 கருவிழிப்படலங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதாக பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற அட்மிரல் வீந்திர விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை உலகிற்கு 88,000 கருவிழிப்படலங்களை நன்கொடையாக வழங்கியுள்ளன. அதில் பாகிஸ்தானுக்கே அதிகளவுவழங்கப்பட்டுள்ளதாகஅவர்மேலும்தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலிலிருந்து ஒட்சிசனை எடுத்துக் கொள்ளும் ஹகார்னியா எனப்படும் கருவிழிப்படலம், இரத்தமில்லாத திசுவால் ஆனது. இதனை, தானமாகக் கொடுப்பவருக்கோ, அதனைப் பெற்றுக் கொள்பவருக்கோ, மருத்துவ ரீதியாக எந்தவொரு பொருத்தமும் வேண்டியதில்லை. அவை இயல்பாகவே எவருக்கும் ஏற்புடையதாகிவிடும்.

(05)

# மேலதிக வகுப்புகளுக்குச் சென்ற 3 மாணவிகள் கம்பஹாவில் மாயம்

கம்பஹா, யக்கல பிரதேசத்தில் உள்ள மேலதிக வகுப்பொன்றுக்குச் சென்ற மூன்று மாணவிகள் காணாமல் போயுள்ளனர் என யக்கல மற்றும் வீரகுல பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, யக்கல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயதுடைய மூன்று மாணவிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் கம்பஹா, யக்கல பிரதேசத்தில் உள்ள மேலதிக வகுப்பொன்றுக்குச் சென்ற நிலையில் கடந்த 29 ஆம் திகதி மாலையிலிருந்து காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


இந்நிலையில், இந்த மாணவிகளின் பெற்றோர் இது தொடர்பில் யக்கல மற்றும் வீரகுல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன மாணவிகள் தொடர்பில் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கல மற்றும் வீரகுல பொலிஸார் மற்றும் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மன்னாரிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட 82 கிலோ ஆமை இறைச்சி சிக்கியது



மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி கடல் ஆமை இறைச்சிகளுடன் 2 சந்தேக நபர்கள் வியாழக்கிழமை மதியம் பள்ளமடு பிரதான வீதியில் வைத்து மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 82 கிலோ கடலாமை இறைச்சி பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மீன்கள் பொதி செய்து கொண்டு செல்லும் போர்வையில் குறித்த கடலாமை பொதி செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையில் இராணுவ புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பள்ளமடு வீதியில் வைத்து குறித்த வாகனத்தைச் சோதனை செய்த போது கடலாமை இறைச்சிகள் மீட்கப்பட்டுள்ளதோடு அதை கொண்டு சென்ற இரண்டு நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மாதகணக்கில் பழுதடைந்த சி.ரி.. ஸ்கான் இயந்திரம்

## நோயாளர்கள் கடும் அவதி

வவுனியா பொது வைத்திய சாலையில் உள்ள சி.ரி. ஸ்கான் இயந்திரம் கடந்த சிலமாதங்களாக பழுதடைந்துள்ளமையால் நோயாளிகள் அவதிக்குள்ளாவதுடன் அலைக்கழிப்பிற்கு உள்ளாக் கப்படுகின்றார்கள்.

வவுனியாபொதுவைத்திய சாலையில் ஒரேயொரு சி.ரி. இயந்திரம்மாத்திரமே உள்ளது. அது கடந்த சில மாதங்களாக பழுதடைந்துள்ளது. இதனால் சி.ரி. ஸ்கான் எடுக்கவேண்டிய நோயாளர்கள் அனுராதபுரம் பொலன்னறுவை மற்றும், யாழ். போதனா வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

அங்கு கொண்டுசெல்லப்படும் ஒரு நோயாளிக்காக அம்புலன்ஸில் ஒருவைத்தியர் தாதியர், சிற்றூழியர் ஆகியோர் பயணிக்கவேண்டும். இதன் மூலம் நேரவிரயம் மாத்திரம் அல்லாமல் வீண் செலவும் ஏற்படுகின்றது. வைத்தியசாலையில் அம்புலன்ஸுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதற்காகவும் காத்திருக்கவேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதேவேளை சில தினங்களிற்கு முன்பாக குறித்த இயந்திரம் திருத்தப்பட்டநிலையில் அன்றைய தினமே மீண்டும் அது பழுதடைந் துள்ளது.

சி.ரி. இயந்திரம் பழுதடைந்து மாதக்கணக்காகும் நிலையில் அதனைத் திருத்திசீரான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதில் வைத்தியசாலை நிர்வாகம் விரைந்து செயற்படவில்லையென்றகுற்றச்சாட்டும் பொதுமக்களிடம் எழுந்துள்ளது.(05)

# வழித்தட அனுமதி இன்றி வெளியிடங்களுக்கு சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல முடியாது

## மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம்



உரிய வழித்தட அனுமதி இன்றி யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல முடியாது என மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் அகழப்படும் சுண்ணாம்புக் கற்களை எவ்வித அனுமதியும் இன்றி வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய, அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட துறைசார் அதிகாரிகள் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவதோடு, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. சட்ட விதிமுறைகளுக்கு அமைய சுண்ணாம்புக்கல் அகழ வேண்டும் எனவும், அதனைஉள்ளூர்தேவைக்கே பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது .

அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக அகழ்வு பணிகளில் ஈடுபடுவோருக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதி பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனுமதிப்பத்திர விதிமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றதா எனத் தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணியாக அதிகாரிகளுக்கு இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது.

அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு மண் கொண்டுவருவதைத் தடை செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.(05)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்த சிகரெட்டுகளுடன் ஒருவர்: கைது

## அவர் உதவி சுங்க அத்தியட்சகராம்

சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 7,000 சிகரெட்டுகளுடன் உதவி சுங்க அத்தியட்சகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை பகுதியில் வைத்து கொழும்பு மத்திய ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து பெறப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் 590,000 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# வவுனியாவில் குளவி கொட்டுக்கு இலக்காகி தொழிலாளர்கள் இருவர் வைத்தியசாலையில்!

வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் அரச விடுதியை துப்புரவு செய்த திணைக்கள தொழிலாளர்கள் இருவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் அரச விடுதியை துப்புரவு செய்யத் திணைக்கள தொழிலாளர்கள் இருவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இரு தொழிலாளர்களும் விடுதியை துப்புரவு செய்த போது அங்கிருந்த குளவிகள் கலைந்து இருவருக்கும் கொட்டியதில் இருவரும் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திணைக்கள தொழிலாளர்களான வே.நாகேந்திரன் (வயது 52), கோணேஸ்வரன் (வயது 46) ஆகிய இருவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

(05)



### தமது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச சட்டங்களில் தீவிர மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

இஸ்ரேல், கமாஸ் மோதல் உடனடியாக முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டு;ம் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகும். அத்துடன் 1965ஆம் ஆண்டின் அறிவிப்பில் எல்லைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளமைக்கு ஏற்ப இரு நாடுகளும் எல்லைகளை மீளமைத்துக்கொள்ள வேண்டும்.

பலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில் 143 நாடுகள் வாக்களித்துள்ளன. ஆகவே பெரும்பான்மை தீர்மானத்துக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் சகவாழ்வுஏற்படுத்தப்படவேண்டும். அடுத்த ஐந்து வருடங்களிற்குள் பாலஸ்தீன அரசை ஏற்படுத்த வேண்டியது அவசியம். சர்வதேசம் இந்தவிடயத்தில்இரட்டைநிலைப்பாடு மற்றும் பாசாங்குதனத்துடன் தொடரமுடியாது.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகள் நல்லிணக்க முயற்சிகள் சம்பந்தமாக மீளாய்வு அவசியமாகின்றது. பிரஜைகளின் மனித உரிமையை மேம்படுத்துவதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை வெளிச் சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல்போயுள்ளதாக தெரிவித்துள்ள 6700 பேரின் வேதனையை ஏற்றுக்கொள்கின்றேன். அவற்றுக்காக இலங்கையில் நல்லிணக்கத்திற்கு ஏற்ற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டிய அவசியமாகும்.

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்;ச்சி நிரலை தவிர்க்கவேண்டும் அதனால் வீணான குழப்பங்களே ஏற்படுகின்றன. நாட்டின் வட,கிழக்கிற்கான அதிகாரப்பகிர்வு மற்றும் அபிவிருத்தியின் அவசியம் மிகவும் அவசியமானதாகும்.

அரசமைப்பில் ஆணையிட்டுள்ளபடி தேர்தல்கள் நடைபெற வேண்டும், ஆகவே ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது; பிற்போடகூடாது. நாங்கள் கடந்த இரண்டு வருடங்களில் சிறப்பாக செயற்பட்டுள்ளோம் அது தொடர்வது சிறந்த விடயம். ஆனால் அதனை தீர்மானிப்பது யார்? மக்களே தீர்மானிக்கவேண்டும்.

நாங்கள் மக்கள் முன்னிலையில் சென்று அவர்களை எங்கள் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள செய்யவேண்டும் அவர்கள் நம்பவில்லை என்றால் அவர்கள் தம்மை ஆட்சி செய்யப்போவது யார் என்று தீர்மானிக்கலாம் - ஜனநாயகம் என்பது அதுதான்.

ஆகவே நான் தேர்தல்களை ஒத்திவைப்பது குறித்த அறிக்கையுடன் என்னை தொடர்புபடுத்த விரும்பவில்லை, தேர்தல்கள் உரிய நேரத்தி;ல் இடம்பெறவேண்டும், ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெறவேண்டும் - என்றார்.

### மோடியடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. பிரதமர் மோடியுடன் மோதக் கூடிய ஒருவர் அல்லவா இலங்கை தேர்தலில் களமிறக்கப்படவேண்டும். அவ்விதமான ஒருவர் இலங்கையில் இருக்கின்றாரா அவருடைய பெயரை தெரிந்து கொள்ளவே ஆசைப் படுகின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் அவ்விதமான ஒருவராக இருப்பவர் ரணில் விக்கிரமசிங்கதான். அவரிடத்தில் இருந்து தான் நாமும் நாடும் பயன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவரது ஆட்சியில் கிடைத்துள்ள அனைத்து வெற்றிகளுக்கும் அனைவருமே உரித்துடையவர்கள்.

ரணில் விக்கிரமசிங்க சவால்களுக்கு மத்தியிலேயே நாட்டைப் பொறுப்பேற்றார். நெருக்கடிகள் நிலவியபோது நாட்டை பொறுப்பேற்க முடியாது என்று கூறியவர்கள் தற்போது பொறுப்பேற்கத் தயார் என்று கூறுகின்றார்கள். அதுதான் வேடிக்கையான விடயமாகும்.

எமது கட்சியில் இருந்து வெளியேறிச் சென்றவர்களே எதிர்க்கட்சியில் இருக்கின்றனர். அவர்களின் இயலுமை எனக்குத் தெரியும். உங்களுக்கும் தெரியும்.

தற்போது அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களை வளர்த்தது ரணில் விக்கிரமசிங்கதான். தற்போது ரணிலால் நாட்டை நிர்வகிக்கமுடியும் என்று அவர்கள் கூறுகின்றனர். அதுவொருவைத்தியக்காரத்தனமான கதையல்லவா. அவர்களும் ஆளும்தரப்பின் அங்கம்தான். ஆகவே மக்கள் விடுதலை முன்னணிதான் எதிர்க்கட்சியாக உள்ளது. அதைப்பற்றி நாம் சிந்திக்கப்போவதில்லை.

### உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்கவும் சீனதூதுவராலயத்தின் ஆலோசகர் டேன்ங் யென்டியும் கைச்சாத்திட் டனர்.

இந்நீதிமன்ற கட்டட புனரமைப்பு திட்டத்துக்காக கடந்த 2023 ஏப்ரல் 23இல், 240 மில்லியன் யுவானை சீன அரசாங்கம் வழங்க ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இருந்தபோதும், இது தொடர்பான முழுமையான மதிப்பீட்டில் மேற்படி இத்திட்டத்திற்கான செலவாக 229 மில்லியன் யுவானாக மதிப்பிடப்பட்டது. இதற்கிணங்க செலவிடப்படவுள்ள 229 யுவான் மில்லியனுக்கான ஒப்பந்தமே கைச்சாத்தாகியது.

### மைத்திரிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரின் சட்டத்தரணிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. இருந்த போதும், அதனை மீறும் வகையில் அவர் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### பொய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல் ஜூன் மாத கொடுப்பனவும் குறித்த மாதத்திலேயே வழங்கப்படும் என்றும், அஸ்வெசும கொடுப்பனவு கட்டமைப்பின் கீழ் உரிய வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சபை அறிவித்துள்ளது.

இதனிடையே தற்போது அஸ்வெசும நலன்புரித் தொகையைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களிலிருந்தும் 70 வயதுக்குமேற்பட்ட முதியவர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

## பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடையவர் கைது

### ஐஸ் போதைப்பொருளும் சிக்கியது

பல்வேறு திருட்டுசம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் 02 கிராம் 240 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடஹமுல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 57 வெளிநாட்டு நாணயத்தாள்கள் மற்றும் தங்க நகைகள் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# பொல்கொல்லை நீர்தேக்கத்தின் ஐந்து வான் கதவுகள் திறப்பு

## பொது மக்கள் அவதானம்



மத்திய மலைநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக பொல்கொல்லை நீர்தேக்கத்தின் ஐந்து வான் கதவுகள் ஒன்று ஒன்றறை மீற்றர் வீதம் வியாழக்கிழமை பிற்பகல் முதல் திறக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபையின் பொல்கொல்லை காரியாலயம் தெரிவித்துள்ளது.

பொல்கொல்லைநீர்தேக்கத்தின்ஐந்துவான்கதவுகள் ஒன்று ஒன்றறை மீற்றர் வீதம் திறக்கப்பட்டுள்ளதாகவும் அதனூடாக ஒரு வினாடிக்கு (செக்கன்) 19,000 ம் கன அடிநீர் விக்டோரியா நீர்தேக்கத்திற்கு அனுப்புவதாகவும் அக் காரியாலயம் மேலும் தெரிவித்தது.

மகாவலி கங்கையில் அதிக அளவில் நீர் அதிகரிப்பதால் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அக் காரியாலயம் மேலும் தெரிவிக்கின்றது.

(05)

# மதுச்சாலை உரிமையாளர் பிபிலையில் அடித்துக் கொலை

மதுபானசாலை ஒன்றில் ஆண் ஒருவரின்சடலம்வியாழக்கிழமை காலை பிபிலை பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 37 வயதுடைய ஹாலி - எல, போகஹமதித்த பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் மதுபானசாலைஒன்றைநடத்திவந்துள்ளார்.

இந்நிலையில், மதுபானசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து, குறித்த ஊழியர் இரும்பு கம்பியால் அவரைதாக்கிகொலையைசெய்துள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன்தொடர்புடைய34 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# மாணவிகளுடன் துர்நடத்தை ஆசிரியருக்குக் கற்பிக்க தடை

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் 10 வயது மாணவிகளுடன் துர்நடத்தையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆசிரியருக்கு வடமாகாண கல்வி அமைச்சால் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 05 இல் கல்வி கற்கும் 10 வயதான மாணவிகளுடன் ஆசிரியர் ஒருவர் தவறாக நடந்து கொண்டார் என பாதிக்கப்பட்ட மாணவி ஒருவரின் பெற்றோர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுசெய்ததன் அடிப்படையில் , பொலிஸார் ஆசிரியரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

ஆசிரியர் தற்போது பிணையில் விடுவிக்கபட்டுள்ளநிலையில்மன்றில் வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் திணைக்களம் ஊடான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் , விசாரணை அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் , ஆசிரியர் தனது பணியினை தொடர தடை விதிக்கப்பட்டு , குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆசிரியருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(05)

# கறையான் அரித்த மின்கம்பங்களை மாற்றி தரும்படி மக்கள் கோரிக்கை





கறையானால் அரிக்கப்பட்ட மின்கம்பங்களை மாற்றி தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நுவரெலியாமாவட்டத்தில்ஹங்குராங்கெத்த ராத்துங்கொட தோட்டப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மரத்தூன்களிலான மின்கம்பங்கள் அடியில் கறையான்களால் அரிக்கப்பட்டு விழும் தருவாயிலில் உள்ளது.

ஹங்குரன்கெத பிரதேச சபைக்குட்பட்ட ஹேவாஹெட்ட ராத்துங்கொட தோட்ட பகுதியில் காணப்படும் மரத்திலான மின்கம்பங்கள் கறையானால் அரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் பலத்த காற்று காரணமாக அது உடைந்து வீடுகளின் மேல் விழும் அபாயம் உள்ளது.

இதனால் இப்பிரதேச மக்களுக்கு மின்கம்பங்களால் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக காணப்படு வதாக பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். ஆகையால் இக்கம்பங்களை மாற்றி தருமாறு இப்பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(05)

# விகாரை புனரமைப்புக்காக திலீபன் எம்.பி. நிதி ஒதுக்கீடு



வவுனியாவின் எல்லைப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்ற கிராமங்களுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபனால் பல்வேறு அபிவிருத்தி பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அந்தவகையில் நந்திமித்திரகம கிராமத்தில் அமைந்துள்ள விகாரைக்கு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அங்கு புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடம் ஒன்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினரால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.அத்துடன், அதற்கு அண்மையில் உள்ள கம்பிலிவெள சிங்கள குடியேற்றப் பகுதிக்கும் பல்வேறுஅபிவிருத்திபணிகளுக்காக 19 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு அவரால் செய்யப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.(05)





காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் சுந்தரகாண்ட பாராயணம்

## புதுடெல்லியில் வருகைதந்த சுவாமி அஜய் பாய் குழுவினர் பங்கேற்பு





வரலாற்றுசிறப்புமிக்கசீதாஎலியசீதையம்மன்ஆலயத்துக்கு புதன்கிழமை மாலை 5 மணிக்கு இந்தியாவின் புதுடெல்லியில் இருந்து சுவாமி அஜய் பாய் தலைமையிலான குழுவினர் 100 பக்தர்கள் வருகை தந்து சீதையம்மன் ஆலயத்தில் சுந்தரகாண்ட பாராயணம் செய்தார்கள்.

இப்பூஜை, வழிபாடுகளில்ஆலயத்தலைவரும்நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி ராதாகிருஷ்ணன் உட்பட ஆலய நிர்வாக சபையினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இக்குழுவினரால் ஆலய தலைவர் சால்வை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இக்குழுவினர்வருடந்தோறும்சீதையம்மன்ஆலயத்துக்கு வருகை தந்து சுந்தரகாண்ட பாராயணம் செய்வதற்கிணங்க, இவ்வருடமும் ஆலயத்துக்கு வருகைதந்து சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்தனர்.

அண்மையில் சீதையம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேக பெருவிழாவைத் தொடர்ந்து, ஆலயத்தில் முதல் முதலாக சுந்தரகாண்டம் பாராயணம் செய்யப்பட்டது.(05)

# கொழும்பு துறைமுகம் வந்த கப்பலில் எரிபொருள் கசிவு



கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பலொன்றில் எரிபொருள் கசிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து எரிபொருள் கசிவை கட்டுப்படுத்து வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கப்பலில் இருந்து கசிந்துள்ள எரிபொருள் துறைமுக கடலில் கலந்துள்ளதால் குறித்த பகுதி கடல் நீர் மாச டைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குத் திரும்பப் பணிப்பு

நாட்டைக்காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம்கருதிதொழிற்சங்கநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மே மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப்பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுத்தலைவர்சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பளமுரண்பாடுஉட்படபலகோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாக பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச்சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம் உங்களுக்குப் பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக் கழகங்கள் இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

இதேவேளை, தங்களுடைய கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை தாம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், இனிவரும் காலங்களில் போராட்டத்தை மேலும் வலுப்படுத்த உள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு புதன்கிழமை இரவு அறிவித்திருந்தது. எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் பணிப்புரை பற்றி ஆராய்வதற்காக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் பிரதிநிதிகள் வியாழக்கிழமை இரவு நிகழ்நிலையில் கூடினர். (05)

# சிறுவர்களின் மத்தியில் புகைப்பழக்கம் அதிகரிப்பு

## அவதானம் என பெற்றோரிடம் வேண்டுகோள்!

இலங்கையில் 13 முதல் 15 வரையான வயதுக்குட்பட்ட சிறுவர்கள் புகைத்தல் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என சிறுவர் நோய்தொடர்பானவைத்தியநிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவி யலாளர்கள்சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விசேடமாகப் பாடசாலைகளில் 9 ,10 மற்றும் 11 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 3.7 சதவீதமானோர் புகைத்தல் பாவனைக்குஅடிமையாகியுள்ளனர்.

பெரும்பாலான சிறுவர்கள் இ-சிகரெட் பயன்பாட்டிற்குப் பின்னரே புகைத்தல் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இ-சிகரெட்டுகளில்ஒருவித இரசாயனம் காணப்படுவதாகவும் வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் இ-சிகரெட்டுகளை பயன்படுத்தும் சிறுவர்கள் வேக மாக புகைத்தல் பாவனைக்கு அடிமையாகுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால் பெற்றோர்கள் அனைவரும் அவர்களது பிள்ளைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

சிகரெட்டு பாவனை காரணமாக சுவாச மற்றும் புற்று நோய்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(05)

# 2 பிள்ளைகளை விட்டுச் சென்ற தாயாரைத் தேடும் பொலிஸார்

இரு பிள்ளைகளையும் வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு தனது காதலனுடன் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்ற தாய் தொடர்பில் குருணாகல் கும்புக்கெடே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

7 வயது பெண் பிள்ளையையும் 2வயதுடையஆண்பிள்ளையையும் தனிமையில்விட்டுவிட்டுகுறித்ததாய் காதலனுடன் தப்பியோடியுள்ளார்.

பிள்ளைகள் இருவரும் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் தந்தை வேலை காரணமாக வெளிநாடு சென்றுள்ள நிலையில் பிள்ளைகள் இருவரும் தாயின் பராமரிப்பின் கீழ் வாழ்ந்து வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கடந்த 28 ஆம் திகதி இரு பிள்ளைகளும் வீட்டிற்குள் அழுதுகொண்டிருப்பதைக் கண்ட உறவினரொருவர் பிள்ளைகளிடம் தாயார் தொடர்பில் விசாரித்துள்ளார். இதன் பின்னர் இது தொடர்பில் குருணாகல் கும்புக்கெடே பொலிஸ் நிலையத்தில் குறித்த உறவினர் முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு பிள்ளைகளும் வீட்டிற்குள் உணவின்றி தவித்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் இரு பிள்ளைகளின் தாயார் அயல் வீட்டில் வசிக்கும் நபரொருவருடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்துள்ள நிலையில் பிள்ளைகளை வீட்டில் தனிமையில் விட்டுவிட்டு காதலனுடன் பிரதேசத்தைவிட்டுத்தப்பிச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருணாகல் கும்புக்கெடே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## கஹதுடுவயில் விபத்து 15 வயது மாணவன் காயம்

கஹதுடுவ, வேதர வைத்தியசாலைக்கு முன்பாக பயணித்த கார் ஒன்று வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வீதியில் பயணித்த மாணவர் ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது , இந்த கார் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி முன்னோக்கி இழுத்துச்செல்லப்பட்டு அருகிலிருந்த மின்கம்பத்தில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலையிலிருந்து கஹதுடுவ நோக்கிப் பயணித்த காரொன்றின் பின்புறத்திலிருந்த சக்கரமொன்றின் காற்று வெளியேறியதால் சாரதியால் காரை கட்டுப்படுத்த முடியாமல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது 15 வயதுடைய மாணவரொருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் வேதர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, 29 வயதுடைய காரின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

## புகைத்தல் பாவனையால் தினசரி 50 உயிரிழப்புகள்

நாட்டில் புகைத்தல் பாவனை காரணமாகத் தினசரி 50 மரணங்கள் பதிவாகுகின்றன என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் புகைத்தல் பாவனை காரணமாக வருடத்துக்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகளாவிய ரீதியில் புகைத்தல் பாவனை காரணமாக 8 மில்லியனுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்;றனர் என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் புகைத்தல் பாவனையாவார்களின் எண்ணிக்கை குறைவடைந்து வந்தாலும் 1.5 மில்லியன் பேர் புகைத்தல் பாவனை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## மனைவி மண்வெட்டியால் தாக்கியதில் கணவன் சாவு

மண்வெட்டியால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கணவர் புதன்கிழமை உயிரிழந்துள்ளார் என இப்பலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பலோகம, கன்திரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 6 ஆம் திகதி தனது வீட்டிற்குள் உறங்கிக்கொண்டிருக்கும் போது சந்தேக நபரான மனைவி இவரை மண்வெட்டியால் தாக்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து காயமடைந்தவர் கெக்கிராவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இவர் கடந்த 24 ஆம் திகதி மீண்டும் கெக்கிராவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் மகளின் வீட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டதையடுத்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான 59 வயதுடைய மனைவி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.06.2024இல் வெளியிடப்பெற்றது